DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 309/2018 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | எஸ்தர் |
| Father / Husband Name | ஸ்டாலின் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 09th January 2024.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1) IOB வங்கிக் காசோலை எதிரியால் கொடுக்கப்பட்டது யார் பெயரில் உள்ளது என்றால் ஜோசப்ஜான்சன் பெயரில் தான் உள்ளது. அந்த இரண்டு காசோலைகளும் ஜான்சன் எலக்ட்ரிக்கல் நிறுவனத்தின் பெயரில் உள்ளது என்றால் அதன் உரிமையாளர் எதிரி தான். ஜான்சன் நிறுவனத்திற்கு நான் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை எதிரி பெயரில் தான் அனுப்பினேன்.

2) புகாரில் மேற்படி நிறுவனத்தை சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. 20.03.2018 ம் தேதி எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படுவதை

நான் 11.06.2018 ம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அன்றைய தினம் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் எதிரி தான் வசூலுக்கு தாக்கல் செய்யச் சொல்லி சொன்னார் அதனால் தாக்கல் செய்தேன். மேற்படி காரணத்தை நான் புகாரிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள தொகை, தேதி, எண் மற்றும் எழுத்தால் எழுதப்பட்ட தொகை யாரால் எழுதப்பட்டது என்றால் எதிரி தான் எழுதிக்கொடுத்தார்.

3) ம.சா.ஆ. 1ல் உள்ள 1 வது காசோலையில் பெயர் வேறொரு மையிலும் காசோலையில் கண்ட தொகை வேறொரு மையாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள எனது பெயரை மட்டும் தான் நான் எழுதினேன். அதிலுள்ள மற்ற சங்கதிகளை எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார். நான் சொல்வது போல் காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) ம.சா.ஆ. 1ல் உள்ள 2 வது காசோலையில் பெயர் வேறொரு மையிலும் காசோலையில் கண்ட தொகை வேறொரு மையாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள எனது பெயரை மட்டும் தான் நான் எழுதினேன். அதிலுள்ள மற்ற சங்கதிகளை எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார். நான் சொல்வது போல் காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) ம.சா.ஆ.1ல் உள்ள 3 முதல் 10 வது காசோலையில் உள்ள எனது பெயர் ஒரு மையினாலும் காசோலை தொகை வேறொரு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் எனது பெயரில் காசோலையை பூர்த்தி செய்வதா அல்லது எனது கணவர் பெயரில் காசோலையை பூர்த்தி செய்வதா என்ற காரணத்திற்காக பெயரை மட்டும் நான் பிறகு பூர்த்தி செய்து கொண்டேன் மற்ற விவரங்களை எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார். காசோலையில் உள்ள கையெழுத்திற்கும் எதிரியின் கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் அவர் தான் பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார்.

6) காசோலை என்னால் போலியாக உற்பத்தி செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் Two wheeler consultation செய்து வருகிறார். எனது அப்பா செந்தில பைனான்ஸ் என்ற நிறுவனத்தை வைத்திருந்தாரா என்றால் பங்குதாரராக இருந்தார். அந்த நிறுவனம் அரசு அனுமதி பெற்றுள்ளதா என்றால்

ஆமாம். மேற்படி செந்தில் பைனான்ஸ் நிறுவனத்தில் காசோலைகளை வாடிக்கையாளர்களிடம் பெற்றுவைப்பது வழக்கம் என்றால் சரியல்ல ஆர்.சி புத்தகங்களைத் தான் பெறுவார்கள்.

7) டியூ தொகைக்காக காசோலைகளை பெறுவது வழக்கம் என்றாலும் அதை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது அப்பாவிற்கு தெரிந்த நபர் என்றாலும் எனது அப்பா மூலமாக எனக்கு தெரியும். எதிரிக்கும் எனது அப்பாவிற்கும் இடையே வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

8) எனது கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கப்பலில் வேலை செய்து வருகிறார். அவருக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் தொகை வேறுபடும். தற்போது மாதம் 9 லட்சம் வருமானம் பெற்று வருகிறார். எனது கணவரின் வருமானம் குறித்து எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

9) எதிரிக்கு நான் பணம் கொடுத்த விவரம் எனது கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கணவரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை அவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். எனக்கு பணம் எப்படி வந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை.

10) ரூபாய் 20,000 க்கிற்கு மேல் ஒரு நபருக்கு கடன் கொடுத்தால் வங்கிக் கணக்கின் மூலமாக மட்டுமே கடன் கொடுக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பணத்தை யார் வீட்டில் வைத்து எதிரிக்கு கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். 5 தவணையாக எதிரிக்கு பணம் கொடுத்தபோதும் எனது வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். பான் கார்டு வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன்.

11) பான் கார்டுயை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரி எனது அப்பாவிடம் 2015 முதல் 2018 வரை வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும் அந்த கடனுக்கான வட்டித் தொகையை நேரடியாகவும் வங்கி மூலமாகவும் எதிரி எனது அப்பா வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த

வழக்கில் தாக்கல் செய்துள்ள 12 காசோலைகளும் எனது அப்பாவிடம் கொடுத்திருந்த காசோலைகள் என்றால் சரியல்ல. எனது அப்பாவிடம் எதிரி கொடுத்த காசோலையை எனது அப்பாவை அணுகி கேட்டபோது காசோலையை எங்கு வைத்தேன் என்பது தெரியவில்லை தேடி தருகிறேன் என்று எனது அப்பா சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல.

12) அதன் பின் பலமுறை என் அப்பாவிடம் எதிரி காசோலையை கேட்டும் எனது அப்பா திருப்பிக்கொடுக்காமல் நம்பிக்கை மோசடி செய்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அப்பாவிடம் செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலையை தேதி, மாதம் மற்றும் தொகையை நானே நிரப்பி வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் எதிரி கடன் வாங்கியிருந்தால் ஒரே நேரத்தில் 12 காசோலைகளை கொடுப்பதற்கு எதிரிக்கு அவசியம் ஏற்பட்டிருக்காது, ஒரு காசோலை தான் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. ஒவ்வொரு காசோலையிலும் ஒரு தொகை நிரப்பி வசூல் செய்துகொள்ளுமாறு கூறி தான் 12 காசோலைகளையும் கொடுத்தார்.

13) மேற்கண்ட சங்கதியை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா வட்டிக்கும் பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றாலும் நானும் அதே தொழில் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் தொழில் செய்வதால் தான் உறவினரோ அல்லது நண்பரோ அல்லதா நபருக்கு மேற்கண்ட தொகையை கொடுத்துள்ளேன் என்றாலும் தெரியாத நபருக்கு புகாரில் கண்ட தொகையை கொடுக்க அவசியமில்லை என்றாலும் சரியல்ல. பொதுவாக ஒரு நபர் 12 காசோலைகளை ஒரே நபருக்கு ஒரே நேரத்தில் கொடுக்க மாட்டார் என்றால் 35 லட்ச ரூபாயை 12 காசோலைகளில் பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்ய சொல்லி கொடுத்தார்.

14) நான் வசூலுக்கு ஒரே நேரத்தில் தாக்கல் செய்துள்ள 12 காசோலைகளும் செக்யூரிட்டிக்காக எதிரியால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எதிரியால் சொன்ன தேதியில் நான் சொன்ன தேதியில் எதிரி காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எவ்வித காசோலையும் அளிக்கவில்லை எந்த மோசடியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15) வழக்கில் தாக்கல் செய்துள்ள 12 காசோலைகளும் ஒரே

வங்ககியின் காசோலைகளா என்றால் இல்லை. எதிரிக்கு ஒரே நேரத்தில் பல்வேறு வங்கியின் காசோலையை அளிப்பதற்கு எவ்வித அவசியமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக பல காசோலைகள் கொடுக்கும் போது ஒவ்வொரு காசோலையும் வேறுவேறு தேதியிட்டு கொடுப்பார்கள் என்றால் எதிரி தான் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தார் சொல்லும் போது வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னார்.

16) உண்மையில் 12 காசோலைகள் கொடுத்திருந்தால் பல்வேறு தேதியில் நிரப்பட்ட காசோலையை கொடுத்திருப்பார் என்றாலும் வெவ்வேறு வங்கிக் காசோலையை கொண்டு வெவ்வேறாகத்தான் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. 12 காசோலைகளையும் கொண்டு ஒரே வழக்காக தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு ஆதரவாக இந்த வழக்கை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனு தள்ளுபடிக்கு உரியது என்றாலும் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 09.01.2024**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.